# செங்கோட்டை நகர்மன்றம்

## சாதாரணகூட்டம்

**செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் ஆகஸ்ட் 1 (01.08.2024) வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்டமண்டபத்தில் வைத்து நடைபெறவிருக்கின்றது. துணைத்தலைவர் அவர்கள் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

**மன்றப்பொருள் : 01**

செங்கோட்டை நகராட்சி 2023–2024 ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு மற்றும் 2024–2025 ஆம் ஆண்டிற்கான உத்தேச நிதி நிலை அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு :

மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 46**

நிதி நிலை அறிக்கை அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் : 02**

செங்கோட்டை நகராட்சியின் 2023–2024ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண் : 47**

பதிவு செய்யப்பட்டது.

**மன்றப்பொருள் : 03**

முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் பொது சமையல் கூடத்தில் உணவு தயார் செய்து 10 அரசு தொடக்கப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பொது சமையல் கூடத்திற்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க மதிப்பீட்டு தொகை ரூ.0.30 (முப்பது ஆயிரம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) அரசின் கொள்கை தொடர்பான திட்டம் என்பதால் மன்றம் அங்கீகரிக்கலாம்..
2) இதற்கான செலவின தொகையினை குடிநீர் வடிகால் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.330/2023 இ1)

**தீர்மான எண் : 48**

அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் : 04**

செங்கோட்டை நகராட்சி வார்டு 7, நாயுடு தெருவில் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிக்கான ஆழ்துளை கிணறு பழுதாகி இருப்பதை சரி செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என 7வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி இசக்கியம்மாள் அவர்கள் சார்பில் கோரிக்கை அளிக்கப்பட்ட நிலையில் மேற்படி பணியினை மேற்கொள்ள நகராட்சி பொறியாளர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு செலவினம் ரூ.1,50,000/--க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) குடிநீர் பணியின் அவசர, அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவின தொகையினை குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 49**

அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் : 05**

செங்கோட்டை நகராட்சி வார்டு 10, பம்பு ஹவுஸ் ரோடு பகுதியில் பழுதடைந்த வாறுகால் பகுதியை அப்புறப்படுத்தி விட்டு புதிய வாறுகால் அமைக்க வேண்டும் என 10 வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி பேபி ரஜப் பாத்திமா அவர்கள் கோரிக்கை மனு அளித்துள்ள நிலையில் நகராட்சி பொறியாளரால் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,00,000/--க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

ந.க.எண்: 576/2024/இ1

அலுவலக குறிப்பு :

1) பொது சுகாதார பணியின் அவசர, அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவின தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண் : 50

அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள் : 06

செங்கோட்டை நகராட்சி பகுதியான வார்டு 11, முத்தழகியம்மன் கோவில் தெருவில் மழை காலங்களில் மழை நீர் வீடுகளுக்குள் செல்வதை தடுக்க புதிதாக சிறுபாலம் அமைக்க வேண்டும் என கோரி திருமதி சரவணகார்த்திகை 11வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் அளித்துள்ள கோரிக்கையின்படி நகராட்சி பொறியாளர் அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 60,000/- (அறுபதாயிரம்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) சுகாதார பணியின் அவசர, அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவின தொகையினை வருவாய் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண் : 51

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள் : 07

செங்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஜெனரேட்டர் பழுதாகி செயல்படாத நிலையில் உள்ளது. தற்சமயம் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருவதால் அலுவலக நிர்வாக பணிகள் பாதிக்கப்பட்டு வருகிறது. வரி வசூல் பணியும் பாதிக்கப்படுகிறது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர். திருநெல்வேலி அவர்களின் காணொளி ஆய்வு கூட்டம் நடைபெறும் நேரங்களில் மின்தடை ஏற்பட்டு மிகுந்த சிரமத்திற்குள்ளாக நேரிடுகிறது. எனவே மேற்படி 15kw திறனுள்ள ஜெனரேட்டரை பழுது நீக்கம் செய்ய சம்பந்தப்பட்ட ஜெனரேட்டர் நிறுவனத்தின் (கிரிலோஸ்கர்) முன்விலைப்புள்ளி கோரியதில் பழுதுக்கான செலவினம் ரூ.17,000/- க்கு முன்விலைபுள்ளி அளித்துள்ளதால் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) அலுவலக நிர்வாக பணியின் அவசர, அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி தொகையினை வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண் : 52

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள் : 08

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்.12, K.C ரோடு, ரீசர்வாயர் நீர்தேக்கம் எதிரில் பொது குடிநீர் குழாய் பழுதடைந்து உள்ளதை சரி செய்வதற்கும், வார்டு 7, காந்தி ரோடு டைமண்ட் கடை அருகில் வால்வு மூடி சரி செய்யவும், வார்டு 1, காலாங்கரை ரயில்வே ஸ்டேஷன் ரோடு, மின்வாரிய அலுவலகம் முன்பு குடிநீர் குழாய் பழுது பார்க்கவும் நகராட்சி பொறியாளரால் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு அறிக்கை ரூ.0.60 (அறுபதாயிரத்துக்கு) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்:660/2024/இ1

அலுவலக குறிப்பு

1. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவின தொகையினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண் : 53

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள் : 09

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் 2022-2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் போது கீழ்க்காணும் அறிவிப்பு செய்யப்பட்டது.

"சாலையோர வியாபாரிகளுக்கானத் திட்டம் (Street Vendors Welfare)

தகுதியானசாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்கள் எவ்வித சிரமும் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்."

இதனைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1, நாள்.16.06.2022ல், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015-ன்படி கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்று தயார் செய்து வழங்குதல் மற்றும் விற்பனைத் திட்டம் தயார் செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டதைத் தொடர்ந்து, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு நடைபெற்றதில், மொத்தம் 489 நபர்கள் உள்ளனர் எனக் கண்டறியப்பட்டு, மேற்படி நபர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்றும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்..20789/2021/UPA, நாள்.07.06.2024ல் தற்போது தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்புப் பணி முடிவுற்றதால், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் விதிகள் 2015, அத்தியாயம் IV-ன்படி, நகர விற்பனைக் குழு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் விற்பனையினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015, அத்தியாயம் IV-ன்படி, நகர விற்பனைக் குழு அமைக்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவில் தலைவருடன் சேர்த்து மொத்தம் 15 உறுப்பினர்கள் அடங்குவர்.

| | | |
|---|---|---|
| நகராட்சி ஆணையர் | -- | 1 (தலைவர்) |
| மருத்துவ அலுவலர் | --- | 1 |
| காவல் அலுவலர்கள் (போக்குவரத்து காவல் அலுவலர் உள்பட) | --- | 2 |
| நகராட்சியின் ஏதேனும் ஒரு அலுவலர் | -- | 1 |
| தெருவோர வியாபாரிகளின் பிரதிநிதிகள் | --- | 6 |
| வணிகர் சங்கப் பிரதிநிதிகள் | --- | 1 |
| அரசு சாரா மற்றும் சமுதாய அமைப்பின் பிரதிநிதிகள் | --- | 2 |
| குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் | ---- | 1 |

மேற்கண்ட 15 உறுப்பினர்களில் 9 உறுப்பினர்களை (தெருவோர வியாபாரிகள் தவிர்த்து) சம்மந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும், மீதம் உள்ள 6 உறுப்பினர்களை மட்டும் கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ள தெருவோர வியாபாரிகள் 74 நபர்களுக்கிடையே தேர்தல் நடத்தி தேர்தல் மூலம் 6 உறுப்பினர்களை தேர்வு செய்ய வேண்டும் எனவும், அவர்களை கீழ்க்காணும் விவரப்படி தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (1) | ஆதிதிராவிடர் | -- | 1 |
| (2) | இதர பிற்படுத்தப்பட்டோர் | --- | 1 |
| (3) | மகளிர் | -- | 1 |
| (4) | மாற்றுத்திறனாளி | --- | 1 |
| (5) | சிறுபான்மையினர் | --- | 1 |
| (6) | பொது | --- | 1 |

மேலும், மேற்கண்ட தேர்தல் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் குறித்து நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என மேற்கண்ட விதிகளில் விதி எண்.13(3) ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றிய பின்பு தேர்தல் நடத்தி அதன் மூலம் 6 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகர விற்பனைக் குழுவில் இடம் பெறவுள்ள 6 தெருவோர வியாபாரிகளை உறுப்பினர்களாக தேர்வு செய்வதற்கான தேர்தலை நடத்த ஜூலை 10ம் தேதிக்கு முன்பாக மன்ற அனுமதி பெற்றிடவும் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்குறிப்பிட்ட அட்டவணையின்படி தேர்தல் நடத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தேர்தல் தொடர்பாக ஆகும் செலவினங்களை இத்திட்டத்தின் கீழ் வரப்பெற்ற நிதியிலிருந்து (அ) பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.299/2020/எப்1)**

**தீர்மான எண் : 54**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் : 10**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்:18, கதவு எண்:235/91, சொத்து வரி விதிப்பு எண்:144/018/900520 கட்டிடமானது வணிக பயன்பாட்டில் செயல்பட்டு வந்த நிலையில், அவை இடிக்கப்பட்டு CSI சர்ச் நுழைவு வாயிலாக மாறறப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023, விதி எண்:267(A)ன்படி வழிபாட்டு தலங்களுக்கான கட்டிடங்களுக்கு வரிவிலக்கு அளிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட வரிவிதிப்பிற்கு விலக்கு அளித்து அனுமதி வழங்கவும், 01.04.2023 முதல் வரியினை வஜா செய்யவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

வருவாய் ஆய்வாளர் அறிக்கையின்படி சொத்து வரி விதிப்பு எண்:144/018/900520 கட்டிடத்திற்கான வரியினை விலக்கு அளிக்கலாம் என பரிந்துரைக்கப்பட்ட நிலையில் வழிபாட்டு தலத்திற்கான பயன்பாட்டில் மேற்கண்ட வரி விதிப்பினை 01.04.2024 முதல் வரி விலக்கு அளித்து அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 55**

அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 11**

செங்கோட்டை நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கீழ்கண்ட வ.எண். 2,3,4 ஆகிய குத்தகை இனங்களை மூன்றாண்டு மற்றும் வ.எண்.1 மட்டும் ஒன்பதாண்டு காலத்திற்கு புதுப்பித்தும் ஆண்டு குத்தகை இனத்திற்கு 5% மற்றும் கடை வாடகை 15% உயர்வு செய்யப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் | காலம் | | தற்போதைய வாடகை | உயர்வு செய்யப்பட்ட வாடகை |
|---|---|---|---|---|---|---|
| | | | முதல் | முடிய | | |
| 1. | நகராட்சி முன்புற கடை 144/704 | திரு.கே.முகைதீன் பாட்சா அண்ணாவி | 01.04.2024 | 31.03.2027 | 1312x15% | 1509 |
| 2. | தெருவோர வியாபாரிகளிடம் தொகை வசூலிக்கும் உரிமம் 144/BD01/ 00019 | திரு.ஏ.சங்கர் கணேஷ் | 01.04.2024 | 31.03.2025 (மூன்றாவது ஆண்டு) | 87675x5% | 92059 |
| 3. | பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 144/BD01/ 00018 | திரு.எல்.சுப்பிர மணியன் | 01.04.2024 | 31.03.2025 (மூன்றாவது ஆண்டு) | 298200 x5% | 313110 |
| 4. | வாரச்சந்தை குத்தகை உரிமம் 144/BD01/ 00017 | திரு.சங்கர் | 01.04.2024 | 31.03.2025 (மூன்றாவது ஆண்டு) | 567000 x5% | 595350 |

அலுவலக குறிப்பு

(ந.க.எண்.3090/2015/அ1)

மேற்படி அட்டவணையில் கண்டுள்ள குத்தகை இனங்களை புதுப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 56**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 12**

செங்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான முத்துசாமி பூங்காவிற்கு செங்கோட்டை நகர்மன்ற தீர்மான எண்.260 நாள்.05.10.2023ன்படி இந்நகராட்சி வருவாயினை அதிகப்படுத்தும் நோக்கில் முத்துசாமி பூங்காவிற்கு வரும் நபர்களிடமிருந்து நுழைவு கட்டணத் தொகை ரூ.5/-வீதம் வசூலிக்கப்பட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டதனை தொடர்ந்து குத்தகை நிபந்தனை துணை விதிகள் இயற்றிட நாளிதழ் மூலம் பொதுமக்கள் ஆட்சேபனை ஏதும் உள்ளதா என விளம்புகை மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு விளம்பரப்படுத்தப்பட்டதில் கீழ்கண்ட நகர்மன்ற உறுப்பினர்கள் நுழைவு கட்டணம் வசூலிக்க கூடாது என ஆட்சேபணை தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார்கள் என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**ஆட்சேபணை தெரிவித்துள்ள மன்ற துணைத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள்**

1. திரு.எஸ்.நவநீதகிருஷ்ணன், நகர்மன்ற துணைத் தலைவர்
2. திரு.கே.சுப்பிரமணியன் 1வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்.
3. திருமதி.S.T.சுடர் ஒலி 3வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
4. திருமதி.V.சரஸ்வதி 4வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
5. திரு.B.ஜெகன்னாதன் 5வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
6. திருமதி.இசக்கியம்மாள் 7வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
7. திருமதி.பேபி ரஜப் பாத்திமா 10 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
8. திருமதி.கோ.சரவண கார்த்திகை 11 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
9. திரு.எம்.இசக்கி துரை பாண்டியன் 12 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
10. திருமதி.S.இந்துமதி 13 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
11. திருமதி கே.சுந்திரா 15 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
12. திரு.கே.முருகையா 16 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
13. திரு.A.ராம்குமார் 17 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
14. திருமதி G.ராதா 18 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
15. திரு.V.முத்துபாண்டி 19 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
16. திருமதி.M.செல்வகுமாரி 20 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
17. திருமதி.M.சுகந்தி 21 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
18. திரு.N.வேம்புராஜ் 22 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்
19. திரு.K.செண்பகராஜன் 24 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்

அலுவலக குறிப்பு
(ந.க.எண்.3090/2015/அ1)

1) செங்கோட்டை நகராட்சி முத்துசாமி பூங்கா மொத்த விஸ்தீரணம் 4.50 ஏக்கர் ஆகும். கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-22ஆம் ஆண்டு மூலமாக ரூ.159.40 லட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் பூங்காவினை சிறந்த முறையில் பராமரிக்கவும், அங்கு நிறுவப்பட்டுள்ள சங்கு ஸ்தூபி புனரமைக்கவும், இந்நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லை, இந்நகராட்சியின் மொத்த வருவாய் ரூ.897.94 மொத்த செலவினம் ரூ.1182.61 2023-24-ன்படி உள்ளது. நிகர பற்றாக்குறை (-) ரூ.284.67 ஆகும். எனவே மேற்படி பூங்காவினை பராமரித்திட இந்நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லை எனவே நுழைவு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில் ஏதேனும் தன்னார்வ அமைப்புகள் அல்லது வங்கிகள் மூலமாக இப்பூங்காவினை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஒப்படைக்கலாம்.
2) மேற்படி பூங்காவிற்கு நுழைவு கட்டணம் வசூலிப்பது குறித்து மன்றம் மறு பரிசீலனை மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண் : 57**

அலுவலக குறிப்பு மன்றத்தில் விவாதிக்கப்பட்டது. அ.இ.அ.தி.மு.க நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் பா.ஜ.க நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் நுழைவு கட்டணம் வசூலிக்கக் கூடாது என தெரிவித்தனர். நகராட்சியில் பராமரிக்க போதிய நிதி ஆதாரம் இல்லை என்று ஆணையாளர் அவர்கள் நீண்ட விளக்கம் அளித்தார்கள். இப்படியே கூட்டத்தை நடத்தாமல் இருந்தால் அதனால் உறுப்பினர்களின் வார்டுகளில் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய இயலாது எனவும் அமைதியுடன் கூட்டத்தை நடத்தவும் கேட்டுக் கொண்டார். மேலும் தன்னார்வ அமைப்புகள் அல்லது வங்கி நிறுவனங்கள் பூங்காவினை பராமரிக்க முன்வந்தால் அவர்களிடம் ஒப்படைக்கலாம் என பெரும்பாலான மன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்ததால் அனைத்து தன்னார்வ அமைப்புகள்

மற்றும் வங்கி குழுமங்களை கடிதம் மூலமாக விருப்பம் கோர முடிவு செய்து நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மன்றப்பொருள் : 13**

செங்கோட்டை நகராட்சியில் தட்டச்சர் பணியிடம் காலியாக உள்ளதால் அலுவலக பணிகள் பாதிக்காத வண்ணம் ஆண்டுதோறும் விலைப்புள்ளி கோரி மேற்படி தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு 2023–2024ஆம் ஆண்டிற்கான விலைப்புள்ளி நகர்மன்ற தீர்மான எண் 230 நாள் 28.6.2023–ன்படி அனுமதிக்கப்பட்ட தொகையில் 2024–2025ம் ஆண்டிற்கும் மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து மேற்படி நிறுவனத்தால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது எனவே, Qtel நிறுவனத்தின் மூலம் அலுவலக தட்டச்சு பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்கு ஆகும் செலவினத் தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இச்செலவினம் 2024–25ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை கணக்கு தலைப்பு எண் 2208003 நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளதில் அடங்கும்.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 58**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் : 14**

செங்கோட்டை நகராட்சியில் 6112 குடிநீர் குழாய் இணைப்புகள் உள்ளது. கிலோ லிட்டருக்கு ரூ.5/– வீதம் குடிநீர் கட்டணமாக வசூல் செய்யப்பட்டு வரும் நிலையில் அரசாணை (நிலை) எண்.120/ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.22.08.2023 மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், சென்னை அவர்களின் அலுவலக கடிதம் ந.க.எண்.240222/Water Chargers Collection/O&M/AEII/2022 Date 30.08.2023ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் கட்டணத்தை கிலோலிட்டருக்கு ரூ.16/– என நிர்ணயம் செய்து மேலும் ஆண்டுதோறும் 5% உயர்த்தவும் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

அரசாணை (நிலை) எண்.120 நகரராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.22.0.2023 மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண் : 59**

அரசாணை மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

**மன்றப்பொருள் : 15**

செங்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கு சீராக குடிநீர் வழங்கப்படவேண்டி தெரிவித்து நகர்மன்ற தலைவர் திருமதி ரா.ராமலெட்சுமி அவர்கள், 1வது வார்டு மன்ற உறுப்பினர் திரு கே.சுப்பிரமணியன் அவர்கள், திரு நவநீதகிருஷ்ணன், நகர்மன்ற துணைத்தலைவர் அவர்கள் மற்றும் திரு ந.வேம்புராஜ் 22 வ்து வார்டு நகர்மன்ற உறுப்பினர் ஆகியோர்கள் கடிதம் வழங்கியுள்ளனர் ஆகவே கீழ்க்கண்ட பகுதிகளுக்கு சீராக குடிநீர் வழங்கும் வகையில் புதிய பகிர்மான குழாய் அமைப்பதற்கான மதிப்பீடு பொறியாளர் அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது மதிப்பீடு ரூ.2,50,000/–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு, வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு மற்றும் தெருவின் பெயர் | புதிய பகிர்மாண குழாய் விபரம் |
|---|---|---|
| 1. | வார்டு 2 குருசாமி தெரு | PVC Piple 3" – 300 மீ, 3" வால்வு – 2 நம்பர் |
| 2. | டோல்கேட் முக்கு | PVC Piple 2" – 100 மீ, 2" வால்வு – 1 நம்பர் |
| 3. | வார்டு 21 காமராஜர் காலனி | PVC Piple 4" – 100 அடி, 4" வால்வு – 1 நம்பர் |

**ந.க.எண்:491/2024/இ1**

**அலுவலக குறிப்பு :**

1) மேற்கண்ட பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் இல்லாத காரணத்தினால் அப்பகுதிக்கு புதிய பகிர்மான குழாய் அமைத்தால் மட்டுமே சீரான குடிநீர் வழங்கிட இயலும் நிலை உள்ளது என நகராட்சி பொறியாளர் அவர்களால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது எனவே மதிப்பீட்டு செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்..

2) மேற்படி செலவின தொகையினை குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 60**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் : 16**

செங்கோட்டை நகராட்சி பிரதான பகுதியான வட்டாட்சியர் அலுவலகம் நுழைவு வாயில் முன்பு உள்ள Highmass 150W LED Light 5 Nos, 440 Voltage இடி மின்னல் காரணமாக பழுது ஏற்பட்டு எரியாமல் உள்ளது என மின்பணியாளர் அறிக்கை செய்துள்ள நிலையில் உயர்மின்கோபுர 5 நம்பர் LED Light–னை பழுது நீக்கம் செய்வதற்கான மதிப்பீடு நகராட்சி பொறியாளர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.1,00,000/–க்கு அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**ந.க.எண்:396/2024/இ1**

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி செலவின தொகையினை வருவாய் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 61**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள்.17**

செங்கோட்டை நகராட்சி பகுதியின் அனைத்து வார்டுகளிலும் உள்ள ஆழ்குழாய் கிணறுகளின் கைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை 2023–2024 ஆம் ஆண்டில் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.26 நாள்.08.02.2024 ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 07.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பதப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி பகுதியின் அனைத்து வார்டுகளிலும் உள்ள ஆழ்குழாய் கிணறுகளின் கைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை 2023–2024 ஆம் ஆண்டில் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 2.50 | திரு.இசக்கி மதிப்பீட்டிற்கு சமம் |
| | | | திரு.அசன் கனி ஒப்பந்த மதிப்பை விட 0.78% அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு சமமாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.இசக்கி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 62**

அலுவலக குறிப்பு ஏற்று திரு.இசக்கி என்பவருடைய விலை விகிதம் ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள்.18**

செங்கோட்டை நகராட்சி 24 வார்டுகளிலும் உள்ள குடிநீர் விநியோக பிரதான குழாய்கள், பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள், கசிவுகள் சரி செய்யவும், சுலீஸ் வால்வுகள், வால்வு தொட்டிகள் மற்றும் பொதுக்குழாய்களில் ஏற்படும் பழுதுகள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை 2023–2024 ஆம் ஆண்டில் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.3 நாள்.08.02.2024 ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 07.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பதப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி 24 வார்டுகளிலும் உள்ள குடிநீர் விநியோக பிரதான குழாய்கள், பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள், கசிவுகள் சரி செய்யவும், சுலீஸ் வால்வுகள், வால்வு தொட்டிகள் மற்றும் பொதுக்குழாய்களில் ஏற்படும் பழுதுகள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை சுத்தம் | 4.00 | திரு.அசன் கனி ஒப்பந்த மதிப்பை விட 0.003% குறைவு |
| | | | திரு.பி.இசக்கி ஒப்பந்த மதிப்பை விட 3.39% அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| | செய்தல் ஆகிய பணிகளை 2023-2024 ஆம் ஆண்டில் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | | |

அலுவலக குறிப்பு

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.003% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எம்.அசன் கனி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண் : 63**

அலுவலக குறிப்பு ஏற்று திரு.அசன் கனி என்பவருடைய விலை விகிதம் மன்றம் ஏற்றுக் கொண்டாலும் அவர் சரிவர செய்யவில்லை என்பதும், உடனுக்கு உடன் பழுதான உடைப்புகளை சரி செய்யவில்லை என்கிற குற்றச்சாட்டும் உள்ளதால் இத்தீர்மாணம் நிறைவேற்றப்பட்டாலும் அவரை சரி வர செய்ய மன்றம் தீர்மானித்து நிறைவேற்றப்பட்டது.

**மன்றப்பொருள்.19**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் உள்ள சிறுவிசை மின்மோட்டார்கள்(சின்டெக்ஸ் தொட்டி) மற்றும் திறந்தவெளி கிணற்றில் உள்ள மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை மற்றும் நுண் உர குடிலில் உள்ள மின் விசை மோட்டார்களை அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்ய வருடாந்தர பராமரிப்பு அடிப்படையில் 2023-2024 ஆம் ஆண்டிற்கு பழுது நீக்கி பராமரிப்பு பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். நாள்.08.02.2024 ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 07.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி பகுதியில் உள்ள சிறுவிசை மின்மோட்டார்கள்(சின்டெக்ஸ் தொட்டி) மற்றும் திறந்தவெளி கிணற்றில் உள்ள மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்ய வருடாந்தர அடிப்படையில் 2023-2024 ஆம் ஆண்டிற்கு பழுது நீக்கி பராமரிப்பு பணி மேற்கொள்ள | 5.00 | திரு.S.பரமசிவன் 0.0030% குறைவு<br>திரு.முத்தையா சாமி ஒப்பந்த மதிப்பை விட 10.73% அதிகம் |

அலுவலக குறிப்பு

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.0030% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.S.பரமசிவன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 64**

அலுவலக குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு திரு.பரமசிவன் என்பவருடைய விலை விகிதத்தை ஏற்று துரிதமாக வேலை செய்திடவும் மன்ற உறுப்பினர்கள் அறிவுறுத்தலின் படியும் மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள்.20**

செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள பழைய கடைகளை இடித்து அப்புறப்படுத்தும் பணி நகர்மன்ற தீர்மான எண். 32 நாள்.08.02.2024 ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 07.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பதப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள பழைய கடைகளை இடித்து அப்புறப்படுத்தும் பணி | 5.00 | திரு.யூ.சேக் அப்துல் காதர் ஒப்பந்த மதிப்பீட்டிற்கு சமம் |

| | | | |
|---|---|---|---|
| | | | திரு.எஸ்.சேக் உதுமான் ஹக்கீம் ஒப்பந்த மதிப்பை விட 0.16% அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு சமமாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிஎள்ள திரு.யூ.சேக் அப்துல் காதர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 65**

அலுவலக குறிப்பு ஏற்று திரு.சேக் அப்துல் காதர் என்பவருடைய விலை விகிதம் அனுமதிக்கப்பட்டும், நல்ல முறையிலும், துரிதமாகவும் வேலைகளை செய்திட மன்றம் ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள்.21**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண் 1 மற்றும் வார்டு எண் 2ல் உள்ள காலாங்கரை பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பிரதான குழாய் உடைப்பினை சரி செய்யும் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.4 நாள்.08.02.2024 ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 07.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பதப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி வார்டு எண் 1 மற்றும் வார்டு எண் 2ல் உள்ள காலாங்கரை பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பிரதான குழாய் உடைப்பினை சரி செய்யும் பணி மேற்கொள்ள | 0.50 | திரு.அசன் கனி ஒப்பந்த மதிப்பை விட 0.07% குறைவு |
| | | | திரு.பி.இசக்கி ஒப்பந்த மதிப்பை விட 1.29% அதிகம் |

அலுவலக குறிப்பு

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.07% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எம்.அசன் கனி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண் : 66**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள்.22**

செங்கோட்டை நகராட்சிக்கு 2023-2024ஆம் ஆண்டிற்கான ஈமக்கிரியை ஒதுக்கீடு தொகை வரப்பெறாததால், தற்போது வரப்பெற்ற 8 மனுக்களுக்கு பொதுமக்கள் அவசியம் மற்றும் நலன் கருதி ஈமக்கிரியை மான்யமாக வழங்கப்படும் தொகை ரூபாய் 5000/- வீதம் 8 மனுக்களுக்கு ரூபாய் 40000/- பொது நிதியில் இருந்து வழங்கிட, ஒதுக்கீடு தொகை பெறப்படும் போது அதனை ஈடு செய்து கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

ரூ.40000/- தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1412/2018/H1)

**தீர்மான எண் : 67**

அனுமதி வழங்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள் 23</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்748/2008/குவ2 நாள் 21-09-2009ன் படி நகராட்சி பகுதியில் புதிதாக குடிநீர் இணைப்புவழங்குவதற்கு சாலை பராமரிப்பு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு ஒவ்வொரு ஆண்டும்முந்தைய ஆண்டு தொகையுடன் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள படி 2024-2025ம் ஆண்டிற்கு சாலை பராமரிப்பு கட்டணம் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 01-04-2024 முதல் 31-03-2025 வரை கீழ்காணும் விபரப்படி கட்டணம் வசூல் செய்து புதிய இணைப்பு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

| விபரம் | கருங்கல் ஜல்லி சாலை | | தார்சாலை | | சிமிண்ட் சாலை | |
|---|---|---|---|---|---|---|
| | முந்தைய ஆண்டு கட்டணம் 2023-2024 | 2024-2025 ஆம் ஆண்டிற்கான கட்டணம் | முந்தைய ஆண்டு கட்டணம் 2023-2024 | 2024-2025 ஆம் ஆண்டிற்கான கட்டணம் | முந்தைய ஆண்டு கட்டணம் 2023-2024 | 2024-2025 ஆம் ஆண்டிற்கான கட்டணம் |
| குடிநீர் வழங்கும் பிரதான குழாயில் இருந்து 0 முதல் 30 மீட்டர் தொலைவு உள்ள குடியிருப்புகளுக்கு | ரூ.2080 | ரூ.2184 | ரூ.4456 | ரூ.4679 | ரூ.5183 | ரூ.5442 |
| குடிநீர் வழங்கும் பிரதான குழாயில் இருந்து 30 முதல் 90 மீட்டர் தொலைவு உள்ள குடியிருப்புகளுக்கு | ரூ.3266 | ரூ.3429 | ரூ.5643 | ரூ.5925 | ரூ.6334 | ரூ.6651 |

(ந.க.எண்; 1009/2005/இ1)

அலுலகக் குறிப்பு ;

2024-2025 ஆம் ஆண்டு வழங்கப்படும் புதிய குடிநீர் இணைப்புகளுக்கு சாலை பராமரிப்பு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதனை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 68**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 24**

செங்கோட்டை நகராட்சி கே.சி.ரோடு வாரச்சந்தை அருகில் உள்ள MCCயில் உள்ள 10HP மோட்டடார் 2 எண்ணம் Coil Bearing and Waste Recycle Machine பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 11.03.2024 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம்.

| வ.எண். | பணியின் பெயர் | வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் | |
|---|---|---|---|
| | | Hitech Electricals& Motors Sales and Services, Sengottai | MM Gani Electrical and Pulumbing |
| 1 | 10 H.P Motor Coil Bearing பகுது நீக்கம் மற்றும் Wastage Recycling Machine Service | ரூ.40,000- | ரூ.42,400/- |

அலுவலக குறிப்பு

1. மேற்காணும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Hitech Electricals& Motors Sales and Services, Sengottai என்பவரின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 69**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 25**

இந்நகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா பேருந்து நிலைய இருசக்கர வாகன காப்பக குத்தகை உரிமத்திற்கு 27.06.2024ல் பொது ஏல மற்றும் ஒப்பந்தபுள்ளி நடைபெற்றது. மேலும் ஒப்பந்தபுள்ளியில் யாரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் மூன்று ஒப்பந்தபுள்ளி வரப்பெற்றது. கீழ்க்கண்ட விபரப்படி.

| வ,எண் | குத்தகைதாரர் பெயர் | ஏலத் தொகை |
|---|---|---|
| 1 | ஆ சங்கர் கணேஷ்<br>29/18, நீராத்திலிங்கம் தெரு<br>செங்கோட்டை<br>9788138938 | ரூ.1,49,500./- |
| 2 | L சுப்பிரமணியன்<br>20A நீராத்திலிங்கம் தெரு | ரூ.1,49,300./- |

| | | |
|---|---|---|
| | செங்கோட்டை | |

பட்டியல் கண்ட விபரப்படி பொது ஏலத்தில் கலந்து கொண்டு அரசு மதிப்பைவிட உயர்ந்தபட்ச தொகை ரூ.1,49,500./- திரு ஆ சங்கர் கணேஷ் என்பவர் ஏலம் கோரியுள்ளார். ஆகையால் அறிஞர் அண்ணா பேருந்து நிலைய இருசக்கர வாகன காப்பக குத்தகை உரிமத்திற்கு 01.07.2024 முதல் உரிமம் வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

(ந.க எண் : 3090/2015/அ1)

பொது ஏலத்தில் கலந்து கொண்டு அரசு மதிப்பைவிட உயர்ந்தபட்ச தொகை ரூ.1,49,500./- திரு ஆ சங்கர் கணேஷ் என்பவர் ஏலம் கோரியுள்ளார். ஆகையால் அறிஞர் அண்ணா பேருந்து நிலைய இருசக்கர வாகன காப்பக குத்தகை உரிமத்திற்கு 01.07.2024 முதல் உரிமம் வழங்க அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 70**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 26**

செங்கோட்டை நகராட்சி 2024-2015 ஆம் ஆண்டிற்கு அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான எழுது பொருட்கள் படிவங்கள் மற்றும் கணினி சாதனங்கள் உட்பட அனைத்து பொருட்களையும் அரசு அனுமதி பெற்ற கூட்டுறவு நிறுவனங்களில் கொள்முதல் செய்திட உத்தேச செலவினம் ரூ.5.50 இலட்சத்தினை வருவாய் மற்றும் மூலதனநிதியில் செலவினம் மேற்கொள்ளவும் ஒப்பந்தபுள்ளி கோரி உரிய கொள்முதல் மேற்கொண்டிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 71**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள்.27**

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான தளவாட சாமான்கள் கொள்முதல் செய்திட நகர்மன்ற தீர்மான எண்.10 நாள்.08.02.2024 ன் படி ஒப்பந்தப்புள்ளி 06.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பதப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | தளவாட சாமான்கள் விபரம் | தனுஷியா கெமிக்கல்ஸ், காமாட்சி தெரு, செங்கோட்டை (ரூபாய்) | அரிஸ் கெமிக்கல்ஸ் காமாட்சி தெரு, செங்கோட்டை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | கையுறை (Nitrile) ஒன்றுக்கு | 150 | 140 |
| 2 | முகவுறை (Mask) ஒன்றுக்கு | 130 | 120 |
| 3 | ஒளிரும் சட்டை (Reflector Jacket) ஒன்றுக்கு | 260 | 250 |
| 4 | மழைகவசம் (Rain Coat) ஒன்றுக்கு | 910 | 900 |
| 5 | மண்வெட்டி (பெரியது) ஒன்றுக்கு | 460 | 450 |
| 6 | நீள மண்வெட்டி ஒன்றுக்கு | 500 | 490 |
| 7 | நீள முள்கரண்டி ஒன்றுக்கு | 345 | 335 |
| 8 | சிறிய முள்கரண்டி ஒன்றுக்கு | 310 | 300 |
| 9 | குப்பை அள்ளும் டப்பா ஒன்றுக்கு | 835 | 825 |
| 10 | வெள்ளை பினாயில் 1 லிட்டருக்கு | 70 | 60 |
| 11 | கருப்பு பினாயில் 1 லிட்டருக்கு | 75 | 65 |
| 12 | Toilet Cleaning Acid 1 லிட்டருக்கு | 60 | 50 |

அலுவலக குறிப்பு

குறைந்த விலை விகிதம் அளித்துள்ள அரிஸ் கெமிக்கல்ஸ் நிறுவன ஒப்பந்த வீதத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.908/2024/எச்1)

**தீர்மான எண் : 72**

அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள்.28**

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான டெங்கு நோய் தடுப்பு பணிக்கான கொசு ஒழிப்பு மருந்து கொள்முதல் செய்திட நகர்மன்ற தீர்மான எண்.8 நாள்.08.02.2024 ன் படி ஒப்பந்தப்புள்ளி 06.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பதப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விபரம் | |
|---|---|---|---|
| | | பைரீத்திரம் | டெமிபாஸ் |
| 1. | தனுஷியா கெமிக்கல்ஸ்,<br>காமாட்சி தெரு, செங்கோட்டை | ரூ.1200/–<br>1 (லிட்டர்) | ரூ.700/–<br>1 (லிட்டர்) |
| 2. | அரிஸ் கெமிக்கல்ஸ்<br>காமாட்சி தெரு, செங்கோட்டை | ரூ.1100/–<br>1 (லிட்டர்) | ரூ.625/–<br>1 (லிட்டர்) |

அலுவலக குறிப்பு

குறைந்த விலை விகிதம் அளித்துள்ள அரிஸ் கெமிக்கல்ஸ் நிறுவன ஒப்பந்த வீதத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.537/2024/எச்1)

**தீர்மான எண் : 73**

அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 29**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் உள்ள அரசு தொடக்கப்பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் உணவு வழங்கும் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்:231, நாள்:28.06.2023ன்படி திரு.சேக் அப்துல் காதர் என்பவருக்கு ஒராண்டிற்கு பணி உத்தரவு மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி ஒப்பந்த காலம் 04.06.2024ல் நிறைவு பெற்றுள்ளதால் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளும் வரையில் மேற்படி ஒப்பந்ததாரர் மூலம் தொடர்ந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அங்கீகார அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) அரசின் கொள்கை தொடர்பான திட்டம் என்பதால் மன்றம் அங்கீகரிக்கலாம்..

2) இதற்கான செலவின தொகையினை வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 74**

அலுவலக குறிப்பு மன்றத்தில் விவாதிக்கப்பட்டதும் அ.இ.அ.தி.மு.க நகர்மன்ற உறுப்பினர்கள், ப.ஜ.க நர்மன்ற உறுப்பினர்கள் வழக்கமாக எதிர்ப்பு தெரிவிக்கும் வண்ணம் எதிர்ப்பை தெரிவித்து வந்தனர். ஆணையாளர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கனவு திட்டம் என்பதை எடுத்துக் கூறினார்கள். மூன்று மாதங்களுக்கு மட்டும் நீட்டித்து வழங்கலாம் என்றனர். அ.தி.மு.க, ப.ஜ.க கவுன்சிலர்கள் ஆணையாளர் அவர்கள் நல்ல முறையில் நடத்தப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மன்றப்பொருள் 30**

2024–25ஆம் ஆண்டில் நகராட்சிகளில் பொதுமக்களுக்கு தேவையான செங்கோட்டை நகராட்சி பகுதியில் தடையில்லா குடிநீர் வழங்கும் வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்தி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. 61/2017 மா.தி3 நாள் 20.2.2024 அன்று அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் தற்போது செங்கோட்டை நகராட்சி மின் மோட்டார்களில் வார்டு 1 முதல் 24 வரையிலான வார்டுகளுக்கும் ஏற்படும் திடீர் பழுதுகளை எதிர்கொள்ளும் வகையில் நான்கு உபரி புதிய மின் மோட்டார்கள் சேர்த்து கொள்முதல் செய்ய ஏற்படும் நகராட்சி பொறியாளரால் ஒப்புதல் அளித்துள்ள மதிப்பீடு ரூ.2.40 (இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம்)–க்கு குடிநீர் விநியோகத்தின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி செலவு தொகையினை குடிநீர் வடிகால் நிதியில் செலவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 75**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 31**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் மேடான பகுதிகள் மற்றும் குறைவாக விநியோகமாகும் பகுதிகள் கண்டறியப்பட்டு அப்பகுதிகளில் டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ஏற்படும் மதிப்பீட்டு செலவினம் ரூ.1.00 (ஒரு இலட்சம்)–க்கு நகராட்சி பொறியாளர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதன்படி குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) இதற்கான செலவு தொகையினை குடிநீர் வடிகால் நிதியில் செலவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 76**

அனுமதி வழங்கப்பட்டது

**மன்றப்பொருள் : 32**

செங்கோட்டை நகராட்சி கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் இயக்கி பராமரிப்பு பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 25 நாள்.08.02.2024 ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 21.06.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் இயக்கி பராமரிப்பு பணி மேற்கொள்ள | 10.50 | திரு.S.பரமசிவன் ஒப்பந்த மதிப்பை விட 0.69% குறைவு |
| | | | திரு.K,சங்கர் ஒப்பந்த மதிப்பை விட 4.50% அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.69% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு,S.பரமசிவன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.834/2023/இ1)

**தீர்மான எண் : 77**

அலுவலக குறிப்பு ஏற்று திரு.பரமசிவன் என்பவருடைய விலை விகிதம் ஒப்புக் கொள்ளப்பட்டது. விரைவாக வேலைகளை முடித்திட உறுப்பினர்கள் வேண்டிக் கேட்டுக் கொண்டனர்.

**மன்றப்பொருள் : 33**

செங்கோட்டை நகராட்சி காலாங்கரை மின் மயானத்தின் உள்ள நவீன எரியாவு தகன மேடை முன்புறத்தில் நிழற்கூடை (Iron Sheet) அமைக்கும் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். நாள்.08.02.2024 ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 21.06.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பதப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை காலாங்கரை மின் மயானத்தின் உள்ள நவீன் எரியாவு தகன மேடை முன்புறத்தில் நிழற்கூடை (Iron Sheet) அமைக்கும் பணி மேற்கொள்ள | 7.00 | திரு.U.சேக் அப்துல் காதர் ஒப்பந்த மதிப்பை விட 0.003% குறைவு |
| | | | திரு.S.சேக் உதுமான் ஹக்கீம் ஒப்பந்த மதிப்பை விட 8.33% அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.003% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.U.சேக் அப்தல் காதர், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.108/2024/இ1)

**தீர்மான எண் : 78**

அனுமதி வழங்கப்பட்டது. விரைந்து முடிக்கவும், தரத்துடன் கட்டவும் மன்றம் கேட்டுக் கொண்டது.

**மன்றப்பொருள் 34**

செங்கோட்டை நகராட்சிக்கு பாத்தியப்பட்ட எரிவாயு தகன மேடை 11.06.2024 முதல் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது. மேற்கண்ட எரிவாயு தகன மேடையினை தற்காலிகமாக நகராட்சி மூலமாக நடத்தப்படுவதால் எரிவாயு தகன மேடையில் தகனம் செய்வதற்கு உடல் ஒன்றுக்கு ரூ.5500/- கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட எரிவாயு தகன மேடையில் உடல்களை எரியூட்டும் வகைக்கு கையாள தெரிந்த பணியாளர்கள் எவரும் நகராட்சியில் பணிபுரிய வில்லை என்பதால் உடல்களை கையாள தெரிந்த திறன்மிக்க பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி அவர்களின் செயல்முறை ஆணை எண் எல்/7646/2023 நாள் 01.06.2023-ன்படி தினக்கூலி இரண்டு நபர் வீதம் ரூ.511/- நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு கூலி வழங்கவும், பாரத் ஏஜென்ஸி 34/149 கே.சி ரோடு காவல் நிலையம் அருகே செங்கோட்டை என்ற நிறுவனத்திடமிருந்து எரிவாயு சிலிண்டர் வாங்கிடவும், அதற்கான செலவின தொகை ஆகியவற்றை தன்னார்வ தொண்டு நிறுவனம் வசம் ஒப்படைக்கும் வரை நகராட்சி மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) எரியூட்டும் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.511/- வீதம் இரண்டு நபர்களுக்கு கூலி வழங்கிட அனுமதிக்கலாம்.
2) எரிவாயு உருளைக்கான செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) எரிவாயு தகன மேடைக்கான எரியூட்டும் உடலுக்கு கட்டணமாக ரூ.5500/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண் : 79**

அ.தி.அ.தி.மு.க மற்றும் பாஜக கட்சி உறுப்பினர்களும் மேலும் தி.மு.க உறுப்பினர் முகமது ரஹூம், பெசானா பேகம், மேரி ஆகியோரும் ஒருமித்த கருத்தை தெரிவித்ததால் ஆணையாளரிடம் இன்று மன்ற கூட்டத்தில் வழங்கியுள்ள விண்ணப்பத்தில் எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணியினை தன்னார்வ அமைப்பிற்கு வழங்கிட வேண்டும் என கோரிக்கை வைத்தனர் என்பதால் அறிஞர் அண்ணா தன்னார்வ அமைப்பிடம் ஒப்படைக்கவும் என தீர்மானிக்கப்பட்டது. அலுவலக குறிப்பு மன்றத்தில் விவாதிக்கப்பட்டது. நகராட்சியில் நிதி ஆதாரம் இல்லை என்பதால் தொடர்ந்து நகராட்சியால் நவீன எரிவாயு தகனமேடை நடத்துவது என்பது நிதியிழப்பு ஏற்பட வழி வகுக்கும் என அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் ஒருமித்த கருத்தை தெரிவித்தவுடன் ஏதேனும் ஒரு தன்னார்வ அமைப்பிடம் நகராட்சி எரிவாயு தகன மேடையினை ஒப்படைக்க வேண்டும் என பெரும்பாலான நகர்மன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். ஆகவே நகராட்சி எரிவாயு தகன மேடையினை தன்னார்வ அமைப்பிடம் ஒப்படைப்பது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. மேலும் தினக் கூலி, சிலிண்டர் செலவுகள் மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள்..35**

செங்கோட்டை நகராட்சி 24வது வார்டு காமராஜர் காலனி (ரேசன் கடைக்கு மேல்புறம்) உள்ள பெண்கள் கழிப்பிடத்தில் பழுதடைந்துள்ள மோட்டாரை பழுது நீக்கம் செய்ய 24வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு கே.செண்பகராஜன் அவர்கள் வழங்கிய கடிதத்தின்படி ஆய்வு செய்யப்பட்டதில் அப்பகுதி கழிப்பிட மின் மோட்டரின் பழுதினை நீக்கம் இயலாத காரணத்தால் புதிதாக மின் மோட்டார் கொள்முதல் செய்யவும், அதற்கான நகராட்சி பொறியாளரால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.60000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவின தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 80**

மன்றம் அனுமதி வழுங்கப்பட்டது.

**மன்றப்பொருள்..36**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் ஆங்காங்கே உரிமம் பெற்று இயங்கி வரும் இறைச்சி கடைகள் அனைத்தினையும் தற்போது பொது ஏலம் குத்தகை அறிவிக்கப்பட்டுள்ள தினசரி சந்தை உட்புறக்கடைகளில் மட்டுமே இயங்கவேண்டும் எனவும், நகரின் அனைத்து பகுதிகளிலும் இயங்குவதால் நாய்தொல்லை அதிகரித்து வருகின்றது எனவும் இதனால் சுகாதார கேடு ஏற்படுவதாகவும் ஆதலால் நகரின் அனைத்து பகுதிகளில் இயங்கிவரும் இறைச்சி மற்றும் மீன் கடைகளை நகராட்சி தினசரிசந்தைக்குள் மட்டுமே இயங்க வேண்டும் என 12 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு எம்.இசக்கிதுரை பாண்டியன் அவர்கள் கோரிக்கை அளித்துள்ளார்.

அலுவலக குறிப்பு .. நகராட்சி பகுதிகளில் இயங்கிவரும் இறைச்சி கடைகள் மற்றும் மீன் கடைகள் அனைத்தும் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட தினசரி சந்தை கடைகளுக்குள் மட்டுமே இயங்குவதற்கு மன்றம் பரிசீலனை செய்து முடிவு செய்யலாம்.

**தீர்மான எண் : 81**

மன்றத்தில் இப்பொருள் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டது. 12வது நகர்மன்ற உறுப்பினர் தெரிவித்த விபரம் மற்ற மன்ற உறுப்பினர்கள் ஏற்று கொள்ளாததால் அவரின் வார்டுக்குட்பட்ட பகுதியின் இறைச்சி கடைகள் செயல்படுவதனை முறைப்படுத்தலாம் எனவும் இதர வார்டுகளில் தற்போதைய நடைமுறையினை பின்பற்றலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்.37**

செங்கோட்டை நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கான 2023–2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவு கீழ்க்கண்டவாறு உள்ளது.

| | |
|---|---|
| முன் இருப்பு | ரூ.158416 |
| 2023–2024 விற்பனை வரவு | ரூ.463212 |
| வங்கி வட்டி | ரூ. 2707 |
| மொத்தம் | ரூ.624335 |
| செலவு | ரூ.1276737 |
| நிகர பற்றாக்குறை | (–) ரூ.652402 |
| பொது நிதி மாற்றம் | ரூ.700000 |
| இறுதி இருப்பு | ரூ.47598 |

ஆகவே தற்போது 2024–2025ஆம் ஆண்டுக்கு அம்மா உணவகத்தினை செயல்படுத்திட அந்தந்த மாதங்களுக்கு தேவைப்படும் கூடுதல் நிதியினை வருவாய் மற்றும் மூலதன நிதி மூலமாக ஈடு செய்துகொள்ள 2024–2025ஆம் வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதால் விற்பனை வரவினை விட ஏற்படும் கூடுதல் செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் ஈடு செய்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு .. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண் : 82**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள்.38**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண் 3 பள்ளிமேட்டு பிள்ளையார் கோவில் தெருவில் தரைமட்ட தொட்டிக்கான ஆழ்துளை கிணறு பழுதாகி இருப்பதனை சரி செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என 3வதசு வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சுடர்ஒலி அவர்கல் சார்பில் கோரிக்கை அளிக்கப்பட்டதனை தொடர்ந்து மேற்கண்ட பணியினை மேற்கொள்ள நகராட்சி பொறியாளர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.150000/– நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தினை குடிநீர் வடிகால் நிதி மூலமாக மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 83**

அனுமதி வழங்கப்பட்டது.

இடம் : செங்கோட்டை

நாள் : 01.08.2024

நகர்மன்றத் தலைவர்

செங்கோட்டை நகர்மன்றம்